**தேதி :** 31.10.2025 **SC.No. :** 71/2020 PW :3 கண்ணன்

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சரவணக்குமாரிடம் டிரைவராக வேலை பார்த்தேன் என்றால் சரிதான். குப்பை கொட்டுவதற்கு தாலுகா அலுவலகத்திலிருந்து அனுமதி உத்தரவு கொடுத்திருந்தார்கள் என்றாலும், அந்த உத்தரவை சரவணன் காவல்நிலையத்தில் கொடுத்தாரா? என்றால் எனக்கு தெரியாது. சரவணக்குமாருக்கும், பூசைத்துரைக்கும் முன்விரோதம் இருந்ததா? என்றால் இல்லை. நான் சண்டையை தடுக்க முயற்சி செய்யவில்லை. பூசைத்துரைக்கு 2 கிட்னியும் பழுதாகி டயாலிசஸ் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவகாலத்தில் எனக்கு 34 வயதிருக்கும். பூசைத்துரையை விட நான் வலிமையுடையவர் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நான் இல்லை என்றாலும், அதனால் தான் நான் தடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அ.சா.1டன் நான் மருத்துவமனை செல்லவில்லை. நான் சம்பவயிடத்தில் இல்லை என்பதினால், மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரியல்ல. சரவணக்குமார் கார், பைக் வைத்துள்ளார் என்றால் சரிதான். அவர் மோட்டார் சைக்கிள், காரில் செல்வார் என்றால் சரிதான்.

நான் பூசைத்துரை இடமான செங்கமால் இடத்தில் குப்பைகளை கொட்டி அசுத்தப்படுத்தியிருந்தேன் என்றாலும், இதை கேள்விபட்டு மாரியம்மாள் தென்காசி – மதுரை ரோட்டில் செங்கமாலுக்கு திரும்புகிற பக்கத்தில் என்னை பார்த்து ஏன் தம்பி, இப்படி எங்க இடத்துல குப்பையை கொட்டுகிற, என்று கேட்டார் என்றாலும், நான் எனது டிராக்டரை நிறுத்தி

விட்டு, பொதுஇடத்தில் வைத்து 2வது எதிரி மாரியம்மாளை பெண் என்றும் பார்க்காமல் அவங்களை அசிங்கமாக பேசி, அவமானப்படுத்தினேன் என்றாலும் சரியல்ல. 2வது எதிரி மாரியம்மாள் அவரது கணவரிடம் சொல்லி, என் மீது போலீசில் புகார் கொடுத்து விடுவார் என்று நினைத்து நான் பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் எனது முதலாளிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எவ்வித வாய்த்தகராறு நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொன்ன மாதிரி, சொன்ன நாளில் எதிரி அ.சா.1ஐ தாக்கவில்லை என்றாலும், உண்மையில் நான் சம்பவயிடத்தில் இருந்திருந்தால் அ.சா.1டன் நான் மருத்துவமனை சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.1க்கு வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து என்னுடைய முதலாளி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும், அ.சா.1 ஐ தாக்கவும் இல்லை என்றாலும், அ.சா.1க்கு காயம் ஏற்படவில்லை என்றாலும், நான் அ.சா.1க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 16:54:35 +0530